## 1. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

### (ஆஓ) பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார் வாழ்ந்த வீடு, நினைவுச் சின்னமாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். சொல்லுங்கள்.*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் ஒரு நாள் பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியாரைப் பற்றி ஒரு கேள்வியை மாண்புமிகு திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் கேட்டார்கள். அந்தக் கேள்வியோடு நான் என்னை இணைத்துக்கொண்டு, பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியாரைப் பற்றியெல்லாம் தெரிவித்து, அவருடைய புத்தகங்களை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனே எழுந்து, அது செய்யப்படும் என்று சொன்னார். பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுடைய மகள்தான் புகழ்பெற்ற மருத்துவர் திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்கள். மருத்துவர் திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்களுடைய மகன்தான் புகழ்பெற்ற மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்கள். அவரோடு நான் பேசிக்கொண்டிருந்தபொழுது, தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே நாவலருடைய புத்தகங்களெல்லாம் நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டன என தெரிவித்தார்கள். ஆனால், அவருடைய பூர்வீகம் எட்டயபுரம். எட்டயபுரத்திலிருந்து நிறைய பேர் இங்கு வந்திருக்கிறார்கள். காரணம், நாவலர் சோமசுந்தர பாரதியாருடைய அப்பா திரு. கிருஷ்ணசுவாமி பாரதி,* Constitutional Assembly*–யில் இருந்தவர். அவர் சுதந்திர போராட்டத்தில் அதிகம் ஈடுபட்டவர்; சுயமரியாதை இயக்கத்தில் இருந்தவர். தமிழுக்காகப் பாடுபட்டவர், சுப்பிரமணிய பாரதியோடு இருந்தவர் அவர். எனவே அவர்கள் மூதாதையர்கள் வாழ்ந்த புராதன வீடு இருக்கிறது. அதன் புகைப்படத்தைக் காண்பித்தார்கள். அற்புதமான வீடு அது. அந்த மாபெரும் தலைவர்கள் வாழ்ந்த வீடு, இன்றைக்கு யார் கையிலோ மாறியிருக்கிறது. அதை நினைவுச் சின்னமாக்குவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தால், அதற்கான பதிலை இப்பொழுது நான் எதிர்பார்க்கிறேன்.*

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து (குறுக்கீடு) இன்னும் பதில் வரவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) பதில் வந்திருந்தால் அவர்கள் சொல்வார்கள், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 4. கவன ஈர்ப்பு

### (அ) திருவள்ளூர் தொகுதி, கனகவல்லிபுரம், துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், நிகழ்ச்சி நிரலில் இருப்பதை அப்படியே படியுங்கள்.*

**திரு. வி.ஜி. ராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், கனகவல்லிபுரம். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், நீங்கள் திருவள்ளூர் தொகுதி, கனகவல்லிபுரம் என்று படியுங்கள்.*